# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யத் தேவையான மதிப்பலகுகள் (Credits) மற்றும் தரப்புள்ளிச் சராசரி (GPA) ஆகியவற்றை பெறத்தவறிய மாணவர்களினது தகவல்களைச் சேகரித்தல்

2001/ 2002 கல்வியாண்டிலும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் தங்களை கிழக்குப் பல்கலைக்கழகத்திலே உள்வாரி இளங்கலை மாணவர்களாக பதிவு செய்து ஆனால் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யத் தேவையான மதிப்பலகுகள் (Credits) மற்றும் தரப்புள்ளிச் சராசரி (GPA) ஆகியவற்றை பெறத்தவறிய மாணவர்களுக்கு உதவும் பொருட்டு (அதாவது, பரீட்சைக்கு தோற்றி கற்கை நெறியை பூர்த்தி செய்தல்) அவர்களது தகவல்களைச் சேகரிப்பதற்கு 19.04.2023 அன்று நடந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 343வது மூதவைக் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மேலே கூறப்பட்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமான மாணவர்கள் தங்களது தரவுகளை வழங்க விரும்பும் பட்சத்தில், மேலதிக தகவல்களுக்காகவும் தகவல்களை வழங்கும் படிவத்திற்காகவும் பல்கலைக் கழகத்தின் இணையத்தளமான www.esn.ac.lk சென்று பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். மேலும் தரவுகள் அடங்கிய படிவமானது **பிரதிப் பதிவாளர்/கல்வி விவகாரங்கள் திணைக்களம், கிழக்குப் பல்கலைக்கழகம்-இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி** என்ற முகவரிக்கு 15.07.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**பதிவாளர்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**15.06.2023**